**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை**

**முன்னிலை திரு. வ. இராமலிங்கம், பி.எஸ்.சி., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை**

**2023 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 27 ஆம் நாள் திங்கட்கிழமை**

**அசல் வழக்கு எண்.149/2021**

CNR.No.TNVR13-000538-2021

முனியசாமி ... வாதி

வேல்ச்சாமி ... பிரதிவாதி

இவ்வழக்கானது இந்நீதின்றம் முன்பாக இறுதியான விசாரணைக்காக 20.02.2023 அன்று வந்தபோது வாதிதரப்பில் வழக்கறிஞர் திரு.என்.சோலைராஜ் அவர்கள் ஆஜரான நிலையிலும் பிரதிவாதி வழக்கறிஞர் திரு.பி.கணேசன் மூலம் இந்நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தாலும் பிரதிவாதிதரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் தோன்றாத்தரப்பினராக ஆகியுள்ள நிலையிலும் வாதிதரப்பு கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

தீர்ப்புரை

1. இந்த வழக்கானது வாதிக்கு பிரதிவாதியை ரூ 8,88,615/-ஐயும் அதில் அசல் தொகை ரூ 2,70,000/-க்கு பிராது தேதிமுதல் தொகை செலுத்தும் நாள்வரை 12% பின்வட்டியும் செலுத்தும்படி கோரியும் அவ்வாறு செலுத்தத் தவறும்பட்சத்தில் வழக்கு அடமானச் சொத்தை ஏலம்போட்டு ஏலத்தில் வரும் தொகையை டிக்கிரிக்கு வரவு வைக்கத் தோதாக முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும் மற்றும் செலவுத் தொகை கோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. பிராதின் சுருக்கம்:-

வாதியிடம் பிரதிவாதி குடும்ப செலவிற்காகவும் கடன் வகை தீர்ப்பதற்காகவும் வேண்டி கடந்த 16.03.2015ம் தேதி ரூ 2,70,000/- ரொக்கமாக கடன் பெற்றுக் கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் 1க்கு ரூ 100/-க்கு ரூ 2/- வீதம் வட்டி செலுத்த ஒப்புக்கொண்டு வழக்குச் சொத்தைப் பொறுத்து பதிவு செய்யப்பட்ட அடமானக் கடன் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். ஆனால் பிரதிவாதி ஒப்புக்கொண்டபடி அடமானக்

கடனுக்கு உரிய அசலையோ வட்டியையோ செலுத்தவில்லை. பலமுறை வாதி பிரதிவாதியை நேரில் சென்று துயர்ந்தும் பிரதிவாதி தொகை செலுத்துவதாக கூறி காலம் கடத்தி வருகிறார். எனவே அடமானக் கடன் பத்திரத்தின்படி தொகையை வரப்பற்ற வேண்டி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் இந்நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தாலும் பிரதிவாதிதரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் தோன்றாத்தரப்பினராக ஆகியுள்ளார். வாதிதரப்பில் வாதி வா.சா.1 ஆகவும் பாண்டியன் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.1 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. வாதி தரப்பு கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

4. இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்குக் கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. <u>தீர்வு:–</u>

இந்த வழக்கானது வாதிக்கு பிரதிவாதியை ரூ 8,88,615/–ஐயும் அதில் அசல் தொகை ரூ 2,70,000/–க்கு பிராது தேதிமுதல் தொகை செலுத்தும் நாள்வரை 12% பின்வட்டியும் செலுத்தும்படி கோரியும் அவ்வாறு செலுத்தத் தவறும்பட்சத்தில் வழக்கு அடமானச் சொத்தை ஏலம்போட்டு ஏலத்தில் வரும் தொகையை டிக்கிரிக்கு வரவு வைக்கத் தோதாக முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும் மற்றும் செலவுத் தொகை கோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. வாதிதரப்பில் பிரதிவாதி வாதியிடம் கடந்த 16.03.2015 ம் தேதி ரூ 2,70,000/– கடனாகப் பெற்றுக் கொண்டு மேற்படி கடன்தொகைக்கு மாதம் 1 க்கு ரூ 100/–க்கு ரூ 2/– வீதம் வட்டி செலுத்த ஒப்புக்கொண்டு மேற்படி தொகைக்கு ஆதரவாக வழக்கு சொத்து விபரத்தில் கண்ட சொத்தை அடமானம் வைத்து ஒரு அடமானப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளதாகவும் அடமானப்பத்திரத்தில் கண்ட வட்டியையும் அசலையும் பிரதிவாதி இதுவரை செலுத்தவில்லை என்றும் எனவே வாதி பிரதிவாதியிடமிருந்து தொகையை வரப்பற்ற இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

7. வாதிதரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வாதிதரப்பு வழக்கு குறித்து சாட்சியமளித்துள்ளார். வாதிதரப்பில், அடமானக் கடன் பத்திரம் வா..சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாதிதரப்பில் வா.சா.ஆ.1 அடமானக் கடன் பத்திரத்தில்

சாட்சிக் கையெழுத்திட்ட பாண்டியன் என்பவர் வா.சா.2 ஆக விசாரணை செய்யப் பட்டுள்ளார். வா.சா.2 ன் ஆதார் அடையாள அட்டையின் நகல் சா.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. வாதிதரப்பில் வாதியிடம் பிரதிவாதி அடமானக் கடன் பத்திரத்தின் அடிப்படையில் கடன் பெற்றது குறித்து வாதி தரப்பில் அதற்குரிய ஆவணங்களைத் தாக்கல் செய்து சாட்சியமும் அளிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் இந்நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தாலும் பிரதிவாதிதரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் தோன்றாத்தரப்பினராக ஆகியுள்ளார். எனவே வாதி தனதுதரப்பு வழக்கை வா.சா.1,வா.சா.2 ன் சாட்சியம் மூலமும் வா.சா.ஆ.1 சான்றாவணம் மூலமும் நிரூபித்துள்ள நிலையிலும் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி யிருந்தாலும் பிரதிவாதிதரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் தோன்றாத் தரப்பினராக ஆகியுள்ள நிலையிலும் வாதியின் வழக்கு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே வாதியின் பிராது, வா.சா.1, வா.சா.2 ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 சான்றாவணம் மற்றும் பிரதிவாதியின் வருகையின்மை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்குக் கிடைக்கத் தக்கதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. முடிவாக வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, வாதிக்கு பிரதிவாதி ரூ 8,88,615/−ஐயும் அதில் அசல் தொகை ரூ 2,70,000/−க்கு பிராது தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை ஆண்டுக்கு 12% வட்டியும் தீர்ப்பாணை தேதிமுதல் தொகை செலுத்தும் நாள்வரை ஆண்டுக்கு 6% வட்டியும் மூன்று மாத காலத்திற்குள் கொடுக்கவேண்டும் என்று முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்துத் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினியில் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு என்னால் 2023 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 27 ஆம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>வாதிதரப்பு சாட்சிகள்</u> :–

வா.சா.1. திரு. முனியசாமி

வா.சா.2. திரு. பாண்டியன்

<u>வாதிதரப்பு சான்றாவணங்கள் :–</u>

வா.சா.ஆ.1. 16.03.2015 வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த பதிவு செய்த அடமானப் பத்திரம்

<u>சாட்சி சான்றாவணம்:–</u>

சா.சா.ஆ.1. வா.சா.2 ன் ஆதார் அடையாள அட்டையின் நகல்

<u>பிரதிவாதிதரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் :</u> – இல்லை

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
அ.வ.எண்.149/2021
சீரான/வரைவுத் தீர்ப்புரை
நாள் – 27.02.2023